# திருவரங்கத்தமுதனார்
# அருளிச் செய்த ப்ரபந்ந காயத்ரி என்னும்
# இராமானுச நூற்றந்தாதி




**பாசுரம்-19**

உறுபெருஞ் செல்வமும் தந்தையும் தாயும்* உயர்குருவும்*
வெறிதரு பூமகள் நாதனும்* மாறன் விளங்கிய சீர்
நெறிதரும் செந்தமிழாரணமேயென்று இந்நீணிலத்தோர்
அறிதர நின்ற இராமானுசன் எனக்காரமுதே.



**பாசுரக் கருத்து**

திருவாய்மொழியே சொத்தும், தந்தையும், தாயும், உயர் குருவும்,ச்ரிய:பதியான பரதேவதையுமாக, உலகிற் ப்ரஸித்தமாகும்படி நின்ற எம்பெருமானார், எனக்கு மிகவும் இனியரென்கிறார்.

**பதவுரை**

மாறன் விளங்கிய சீர் நெறிதரும் செந்தமிழாரணம்:
சீர்- பரபக்தி,பரஞான, பரமபக்திகள் என்னும் நல்லியல்புகள். மறைந்து கிடந்தவை இறைவன் அருளால் நம்மாழ்வாருக்கு வெளிப்பட்டபோது, அவர் செந்தமிழாரணத்தைத் தந்தருளினார்.
பரபக்தி என்பது- பிரிவில் வருந்தும்படியான நிலையையும், கூடில் மகிழும்படியான நிலையையும் விளைவிப்பதான தனிப்பட்ட அன்பு.
பரஞானமாவது - அத்தகைய அன்பு முதிர்ந்த நிலையில் ஏற்படும் தோற்றம்.
பரபக்தியாவது- க்ஷணகாலமும் பிரிவை தாங்க மாட்டாது, அனுபவித்தேயாக வேண்டிய பேரன்பு.

**பாசுர அர்த்தம்**

எம்பெருமானின் திருக்குணங்களை அடைவே அனுபவித்த நம்மாழ்வாரின் திருவாய்மொழி செந்தமிழ்வேதமாகும். அப்பிரபந்தமே, இராமானுசருக்கு

பெருஞ் செல்வமாகவும், தந்தை தாயாகவும், உயர்ந்த குருவாகவும், மணம் மிகுந்த பூவில் வாழும் திருமகளுக்கு நாதனாகவும் உள்ளது. இந்த எம்பெருமானாரே அடியேனுக்கு அமுதம் ஆவார்.

**பாசுரம்-20**



ஸ்ரீமத் நாதமுனிகள்

ஆரப்பொழில் தென்குருகைப்பிரான்* அமுதத்திருவாய்
ஈரத்தமிழின் இசையுணர்ந்தோர்கட்கு*இனியவர் தம்
சீரைப்பயின்றுய்யுஞ் சீலங்கொள் நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும்* இராமானுசன் என் தன் மாமுனியே.

**பாசுரக் கருத்து**

இதுகாறும் எம்பெருமானார்க்கு,ஆழ்வார்களிடம் உள்ள ஈடுபாடு பேசப்பட்டது.இனி ஆசார்யர்களிடமுள்ள ஈடுபாடு பேசப்படுகிறது. இப்பாசுரத்தில், நாதமுனியை ஆர்வத்தோடு நெஞ்சால் அநுபவிக்கும் எம்பெருமானார், எனக்குக் கிடைத்த புதையல் என்கிறார்.

**பதவுரை**

என்தன் மாநிதி:

ஏனைய நிதிகள் போல அழிவுறாத புதையல் எம்பெருமானார். ஆழ்வான் உதவிய ஞானக்கண்ணால்,அப்புதையலைக் கண்டெடுத்து,ஆண்டநுபவிக்கும்தனது பாக்யம் தோற்ற, என்தன் மாநிதி என்கிறார்.

**பாசுர அர்த்தம்**

சந்தனச் சோலைகளை உடைய, அழகிய திருநகரிக்குத் தலைவரான நம்மாழ்வாருடைய, மிக்க இனிய திருவாயிலிருந்து வெளி வந்த ,நனைந்து குளிர்ந்துள்ள திருவாய்மொழியினுடைய இசையை அறிந்தவர்களுக்கு, பிடித்தவர்களுடைய குணங்களை, பழகி, உஜ்ஜீவிக்கும், ஸ்வபாவமுடையவரான நாதமுனிகளை, மனத்தால் வாரி அநுபவிக்கும் எம்பெருமானார், எனது பெரும் புதையலாவார்.

## பாசுரம்-21

நிதியைப் பொழியும் முகிலென்று* நீசர் தம் வாசல்ப்பற்றித்
துதிகற்றுலகில் துவள்கின்றிலேன் இனி* தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன் யமுனைத்துறைவனிணையடியாம்
கதிபெற்றுடைய* இராமானுசன் என்னைக்காத்தனனே.



ஆளவந்தார்

**பாசுரக் கருத்து**

ஆளவந்தாருடைய திருவடிகளை பெறும்பேறாகவுடைய எம்பெருமானார், என்னை ரக்ஷித்தருளினார். ஆகையால் அற்பர்களுடைய வாசல்களில் நின்று அவர்களுடைய வள்ளன்மை முதலியவற்றைக் கூறிப் புகழ்பாட மாட்டேன் என்கிறார்.

**பதவுரை**

**தூய்நெறிசேர் எதிகட்கிறைவன்:**
அஹங்காரக் கலப்பினால் மாசுற்ற, மற்ற உபாயங்களை விட்டுத், தூயதான ஸித்தோபாயத்தின் எல்லை நிலமான ஆச்சார்யனையே உபாயமாகக் கொள்ளலின், தூய்நெறி என்கிறார்.

**பாசுர அர்த்தம்**

தூய்மையான பக்தி,ஒழுக்கம் வாய்ந்த ஸ்ந்நியாஸிகட்கு தலைவரான ஆளவந்தாருடைய இணைத்திருவடிகளை அடைந்த ஸ்வாமியான இராமானுசர் என்னைக் காத்தருளினார். இனிமேல் தாழ்ந்தவர் வாசலைப் பற்றி நின்று, நிதியைப் பொழிகின்ற மேகமே என்று வீணான துதி செய்து வருந்த மாட்டேன்.

**பாசுரம்-22**

கார்த்திகையானும் கரிமுகத்தானும்* கனலும் முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு* மூவுலகம்
பூத்தவனே! என்று போற்றிடவாணன் பிழை பொறுத்த
தீர்த்தனையேத்தும்* இராமானுசன் என் தன் சேமவைப்பே.



பாணாசுர யுத்தம்

**பாசுரக் கருத்து**

தன்னை எதிர்த்துப் போரிட்ட அமரர், மக்கள் இவர்களோடு கூடிய முக்கண்ணன் என்னும் இவர்கள்,தோல்வி அடைந்து, தன் வைபவத்தை அறிந்து துதிக்க, அவர்களுக்காக வாணன் அபராதத்தை பொறுத்த ஸர்வேஸ்வரனை ஏத்தும் எம்பெருமானார், எனக்கு சமயத்துக்கு உதவச் சேமித்து வைத்த செல்வம் என்கிறார்.

**பதவுரை**

**கார்த்திகையானும் கரிமுகத்தானும் கனலும் முக்கண் மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு:**
ஸுப்ரமண்யனும், விநாயகனும் , அக்னிதேவனும், சிவனும், காளியும், ஜ்வரதேவதையும் இவர்களோடு கூடிய பாணாசுரனோடு, கண்ணன் போரிட படையெடுத்து வந்த போது, தானும் தன் மக்களும், பக்கபலமாக வந்த அக்னி முதலிய தேவர்களுமாக முக்கண்ணன் , வாணனைக் காக்கமுற்பட்டுப் போர் செய்யாது, புறங்காட்டியோடினான்.

**பாசுர அர்த்தம்**

முருகனும், யானைமுகனும், அக்னியும், சிவனும், காலியும், வெப்ப தேவதையும் புறமுதுகுக் காட்டி ஓடிய பிறகு, பாணாசுரன் கண்ணனிடம் மூவுலகையும் நாபியில் உண்டாக்கியவனே! “என் பிழைப் பொறுத்திடுக” என வேண்டியதும், அவன் பிழையைப் பொறுத்தான். இத்தூயவனான திருமாலைத் துதிக்கும் இராமானுசரே எனக்குக் காப்புச் செல்வம் ஆவார்.

## பாசுரம்-23

வைப்பாயவான் பொருளென்று* நல்லன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்கும் இராமானுசனை* இருநிலத்தில்
ஒப்பாரில்லாத வுறுவினையேன் வஞ்ச நெஞ்சில் வைத்து
முப்போதும் வாழ்த்துவன்*என்னாம் இது அவன் மொய் புகழ்க்கே.

### பாசுரக் கருத்து

நல்ல அன்பர்கள் சிறந்த செல்வமாகத் தங்கள் நெஞ்சிலே வைத்துக் கொண்டிருக்கும் எம்பெருமானாரை, மிக்க பாவியான நான் குற்றமுள்ள நெஞ்சிலே வைத்து எப்போதும் ஏத்தா நின்றேன். இது அவரது சீரிய கீர்த்திக்கு என்னவாய் முடியுமோ என்கிறார்.



## பதவுரை

வைப்பாய ........இராமானுசனை: மதுசூதனனையே ஆழ்வார் வைத்த மாநிதியாகக் கொள்வது போல், நல்லன்பர் எம்பெருமானாரையே வைப்பாய வான் பொருளாகக் கொள்கின்றனர். கைமுதல் இல்லாத

காலத்து, நிதி பயன்பட்டுக் காப்பது போலத் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள ஸாதநம் எதுவும் இல்லாத நிலையில், தம்மைக் காப்பாற்றும் எம்பெருமானாரே, ஸித்த ஸாதநமாய்ப் பயன்படுதலின் அவரையே, வைப்பாய பொருளாகக் கொள்கின்றனர் நல்லன்பர். வைப்பாய பொருள் பயன்படப் பயன்படக் குறைந்துக் கொண்டே போகும். எம்பெருமானாராகிய வைப்புப் பொருளோ, அங்ஙனம் குறைவுறாது என்பதால், வான்பொருள் என்கிறார்.

**பாசுர அர்த்தம்**

நல்ல பக்தி உடைய அடியார்கள் , இராமானுசரைத் தங்கள் வைப்பு நிதியாக மனத்தில் கொள்வர். இப்பெரிய உலகில், ஒப்பில்லாத பாவியான அடியேன், எம்பெருமானாரை நெஞ்சில் கொண்டு, மூன்று பொழுதுகளிலும் வாழ்த்துவேன். என்செயல் அவர் சிறந்த புகழுக்குக் கேடாக இருக்குமோ?

---